**04.01.2025**

**O.S.No. 32/2017**

**பி.வா.சா.1 : செல்லம்**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) அம்பிகா என்பவர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். அவர் எனது சின்னம்மாள் மகள். தாவா சொத்து ஆதியில் பழனிமுத்து கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. அவருக்கு மொத்தம் ஒரு மகன் மற்றும் 3 மகள்கள். மகன் பெயர் ராமகவுண்டர். முனியம்மாள் மாரியம்மாள் மற்றும் மணி ஆகியோர் மகள்கள் ஆவார். நான் மாரியம்மாளின் மகள். என் தாயார் 2016 ல் இறந்துவிட்டார்.

2) மணி என்பவரும் இறந்துவிட்டார். அவருக்கு ஒரு மகள், பெயர் அம்பிகா. தாவா சொத்தை பொருத்து எந்தவித பாக பிரிவினை ஆவணமும் செய்து வைக்காமல் எனது தாத்தா பழனிமுத்து கவுண்டரும், பாட்டி ஜானகியும் இறந்துவிட்டார்கள். அதனால் தாவா சொத்துக்களில் என் தாத்தாவின் வாரிசுகள் அனைவருக்கும் சரிசமமான பங்கு உள்ளது. வழக்கு சொத்து பொருத்து என் அம்மா அ.வ.எண். 100/2010 என்ற வழக்கில் பாக பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

3) அந்த பாக பிரிவினையில் மணி என்பவரின் மகள் அம்பிகா என்பவரை தரப்பினராக சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்து இருந்தார் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு அம்பிகா தன்னையும் தரப்பினராக சேர்க்ககோரி மனு தாக்கல் செய்து இறுதி நிலை தீர்ப்பாணை மனுவில் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல்

செய்த என் அம்மா இறந்துவிட்டதால் நான் வாரிசு என்ற முறையில் அந்த வழக்கையும் நடத்தி வருகிறேன். என் தாயார் வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு என் மாமான் மனைவி லட்சுமி, மகள்கள் சின்னம்மாள், பரமேஸ்வரி, முனியம்மாள், மீனாட்சி ஆகியோர்கள் எங்களை யாரையும் தரப்பினராக சேர்க்காமல் தாவா சொத்துக்களை பொருத்து மோசடியாக ஒரு பாக பிரிவினை பத்திரம் பதிவு செய்துள்ளார்கள்.

4) 21.09.2010ல் ஆவண எண். 4970/2010, ஆத்தூர் சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது (அது வா.சா.ஆ.1). என் அம்மா தாக்கல் செய்துள்ள வழக்கு நிலுவையில் இருக்கும் போதே மோசடியாக தாவா சொத்துக்களை பொருத்து மோசடியாக ஏற்படுத்திய பாக பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் ராமகவுண்டரின் மனைவி மற்றும் மகள்கள் பல நபர்களுக்கு சொத்துக்களை விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

5) என் தாத்தா பாட்டிக்கு பாத்தியப்பட்ட மொத்த சொத்துக்கள் எவ்வளவு என்றால் சுமார் 5 ஏக்கர் 35 செண்ட் ஆகும். அந்த மொத்த சொத்துக்களில் ராமகவுணடரின் வாரிசுகளுக்கு பொதுவில் 1/4 பாகம் தான் உள்ளது. மீதி 3/4 பாகங்கள் என் தாயாருடன் பிறந்த மற்ற 2 சகோதரிகளுக்கு பாத்தியப்பட்டது. மேற்படி மோசடியாக ஏற்பட்ட பத்திரங்கள் மேற்படி வழக்கை மறைத்து வழக்கு நிலுவையில் இருக்கும் போது எழுதப்பட்டவை என்றால் சரிதான்.

6) 02.08.2010 ல் தான் என் தாயார் வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும். தாவா தாக்கல் செய்த பின்னிட்டு 21.09.2010 ல் தான் தாவா சொத்துக்களை பொருத்து மோசடியாக ஒரு பாக பிரிவினை பத்திரம் பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். என் தாயார் இந்த வழக்கை தாக்கல் செய்துபின்பு மேற்படி தாவா சொத்துக்களில் என்னுடைய பாகத்தையும் சேர்த்து பல நபர்களுக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

7) என் தாத்தா சொத்தில் விற்பனை ஆகாத சொத்து 0.98-1/2 செண்ட் விஸ்தீரணம் சொத்து மட்டும் தான் மீதி உள்ளது. அது பரமேஸ்வரி பெயரில் உள்ளது. பிரதிவாதிகள் நீதிமன்ற அழைப்பாணை பெற்ற பின்பு நிறைய சொத்துக்களை விற்று உள்ளார்கள் என்றால் சரிதான். அவர் அவர்களுக்கு உரிய பாகத்தை தவிர மற்றவர்களுடைய பாகத்தை சேர்த்து எழுதிய கிரய பத்திரம் செல்லுமா என்றால் செல்லாது.

8) உண்மையான தரப்பினர்களை சேர்க்காமல் 21.09.2010 ல் ராம கவுண்டர் வகையறா எழுதிய பாக பத்திரம் செல்லதக்கது அல்ல என்றால் சரிதான். அதே போல் அவர்கள் எழுதிய அனைத்து கிரையபத்திரங்களில், பாக பத்திரங்களில் முதலிய ஆவணங்களில் நானோ, எனது தாயாரோ, மற்ற என் தாயாரின் சகோதரிகளோ அவர்களுடைய வாரிசுகளோ கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் இல்லை. நியாமான சட்டப்படியான பாக பத்திரம் எழுததால் சட்டப்படியான பாக பிரிவினை கோரி

வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வாதி கோரியப்படி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சட்டப்படி எனக்கு உரிய பாகத்தை பிரித்து தீர்ப்பு வழங்குவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. என் சின்னம்மாளை சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள அ.வ.எண். 100/2010 ல் முதல் நிலை தீர்ப்பாணையை ரத்து செய்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சட்டப்படி எனக்கு உரிய பாகத்தை பிரித்து தீர்ப்பு வழங்குவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/-S.Ganesan**
**Subordinate Judge, Attur.**